# போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு

# பதவி வெற்றிடங்கள் — கருத்திட்டப் பணியாட்குழு

2019 மார்ச் 5 ஆம் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 01/2019 இன் பிரகாரம், கொழும்பு புறநகர் புகையிரதக் கருத்திட்டத்தின் (CSRP) கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்குக் கருத்திட்டப் பணியாட் குழுவினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் போக்குவரத்துப் பிரிவினால் கோரப்படுகின்றன.

**கொழும்பு புறநகர் புகையிரதக் கருத்திட்டம் (CSRP) என்பது:**

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் (ADB) வழங்கப்படுகின்ற கடன் உதவியின் கீழ், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் போக்குவரத்துப் பிரிவின் மற்றும் இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் (SLR) வழிகாட்டுதலின் கீழ் 2026.12.31 ஆம் திகதி வரை இந்தக் கருத்திட்டம் செயற்படுத்தப்படும்.

கீழே தரப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள, ஆங்கில மொழியில் சிறந்த தேர்ச்சி, அரசாங்க ஒழுங்குவிதிமுறைகள் தொடர்பான அறிவு, வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டச் சூழலில் பணியாற்றிய அனுபவம், கணினி அறிவு ஆகியவற்றைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து பின்வருகின்ற பதவி வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தற்போது புகையிரதத் துறையில் (தொடர்புடைய துறைகளில்) பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் இதற்காக விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

| பதவி | தகைமைகள் |
|---|---|
| **01. கருத்திட்டப் பணிப்பாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01**<br>**PS-1**<br>பொறியியல், நிதி, பெறுகை, சமூக மற்றும் சுற்றாடல் அலுவல்கள், மனித வளங்கள், காணி கையகப்படுத்தல் என்பன உள்ளடங்கலாக மொத்தக் கருத்திட்டப் பணிகளுக்கும் பொறுப்பு வகித்தல். கருத்திட்டம் மற்றும் அமைச்சு மற்றும் இலங்கைப் புகையிரத திணைக்களம் ஆகியவற்றுக்கிடையே ஒருங்கிணைப்பைப் பேணி வருதல். ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் வழி காட்டுதல்கள், நடைமுறைகள் மற்றும் சட்ட விதிகளுக்கு அமைவாக கருத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்தல். | **(கீழேயுள்ள 1 அல்லது 2 அல்லது 3 ஆகியவற்றில் ஒரு தகைமை இருத்தல் வேண்டும்)**<br>01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் பட்டம். **அல்லது**<br>தொடர்புடைய துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமையொன்றாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று, **அல்லது**<br>தொடர்புடைய துறைக்குரிய தொழில்சார் நிறுவனம் ஒன்றிலிருந்து இணை உறுப்புரிமை (Associate membership) பெற்றிருத்தல்/ அவ்வாறான நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சமமான தொழில்சார் தகைமையொன்று, **மற்றும்**<br>தகைமை பெற்ற பின்னர், முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 16 ஆண்டுகால அனுபவம் இருத்தல் வேண்டும் மற்றும் அதில் 08 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.<br>02. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் பட்டமொன்று. **அல்லது**<br>தொடர்புடைய துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமையொன்றாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று, **அல்லது**<br>தொடர்புடைய துறைக்குரிய தொழில்சார் நிறுவனம் ஒன்றிலிருந்து இணை உறுப்புரிமை (Associate membership) பெற்றிருத்தல்/ அவ்வாறான தொழில்சார் நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சமமான தொழில்சார் தகைமையொன்று,<br>தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட கூட்டாண்மை/பட்டய உறுப்புரிமை (Corporate/charted membership) அல்லது அதற்குச் சமமான தொழில்தகைமையொன்று அல்லது தொடர்புடைய துறையில் பட்டப்பின் பட்டம்.<br>**மற்றும்**<br>தகைமை பெற்ற பின்னர்,தொடர்புடைய துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது 14 ஆண்டுகால அனுபவம் மற்றும் அதில் 07 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.<br>03. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் பட்டமொன்று. **அல்லது**<br>தொடர்புடைய துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமையொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று, **மற்றும்**<br>தொடர்புடைய துறையில் பட்டப்பின் பட்டமொன்று இருத்தல் **மற்றும்**<br>தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட கூட்டாண்மை/பட்டய உறுப்புரிமை (Corporate/charted membership) அல்லது அதற்குச் சமமான தொழில் தகைமையொன்று. **மற்றும்**<br>தகைமை பெற்ற பின்னர், முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 12 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் மற்றும் அதில் 06 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும். |
| **02. பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் (பெறுகை)**<br>**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01**<br>**PS-2**<br>ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டுதல்களின் பிரகாரம் பெறுகைத் திட்டம், பெறுகைக் கொள்கை, பெறுகை கால அட்டவணைகளைத் தயாரித்தல், பெறுகைக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமனம் செய்தல், பெறுகை ஆவணங்களைத் தயாரித்தல், பெறுகைப் பணிகள் சிறப்பாகவும் மற்றும் சரியான நேரத்திலும் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்தல்.<br>பெறுகை ஒப்பந்தங்களைத் தயாரித்தல், பெறுகை சார்ந்த பொதுவான கொடுப்பனவுகள் போன்றன தொடர்பில் முடிவெடுப்பதற்கு உதவுதல் தொடர்பில் பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் (பெறுகை) பொறுப்புக் கூறுதல் வேண்டும்.<br>**03. பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் (நிதி) வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01**<br>**PS-2**<br>நிதியத்துக்கான வரவு செலவு ஒதுக்கீடுகளை மதிப்பீடு செய்தல், கொடுப்பனவுகள் போன்ற கருத்திட்டத்தின் அனைத்து நிதி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்,<br>நிதி நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குதல்,<br>கொடுப்பனவு செயன்முறை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவின் கணக்குகளுக்கு நிதி அனுப்புதல்/ நிதியை மாற்றம் செய்தல் மொத்த செயன்முறையைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல் பொறுப்பை வகித்தல்,<br>நிதித் துறைக்குரிய வடிவமைப்பு ஆலோசனைகளுடன் (design consultancies) ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல் | **(கீழேயுள்ள 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4 ஆகியவற்றில் ஒரு தகைமை இருத்தல் வேண்டும்)**<br>01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் பட்டம். **அல்லது**<br>தொடர்புடைய துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று, **அல்லது**<br>தொடர்புடைய துறைக்குரிய தொழில்சார் நிறுவனம் ஒன்றிலிருந்து இணை உறுப்புரிமை (Associate membership) பெற்றிருத்தல் / அவ்வாறான தொழில்சார் நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்டசமமான தொழில்சார் தகைமையொன்று, **மற்றும்**<br>தகைமை பெற்ற பின்னர், குறித்த துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் மற்றும் அதில் 07 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.<br>02. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் பட்டமொன்று. **அல்லது**<br>தொடர்புடைய துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமையொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று, **மற்றும்**<br>தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட கூட்டாண்மை / பட்டய உறுப்புரிமை (Corporate/charted membership) அல்லது அதற்குச் சமமான தொழிற் தகைமையொன்று **அல்லது**<br>தொடர்புடைய துறையில் பட்டப்பின் பட்டமொன்று இருத்தல் மற்றும் தகைமை பெற்ற பின்னர், முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 13 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் மற்றும் அதில் 06 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.<br>03. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் பட்டமொன்று. **அல்லது**<br>தொடர்புடைய துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமையொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று, **மற்றும்**<br>தொடர்புடைய துறையில் பட்டப்பின் பட்டமொன்று இருத்தல் **மற்றும்**<br>சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட கூட்டாண்மை / பட்டய உறுப்புரிமை (Corporate/charted membership) அல்லது அதற்குச் சமமான தொழில்தகைமை **மற்றும்**<br>தகைமை பெற்ற பின்னர், முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 11 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் மற்றும் அதில் 05 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.<br>04. நாடளாவிய அரசாங்க சேவை ஒன்றில் தரம் 1 அலுவலர் ஒருவராக இருத்தல் அல்லது தொடர்புடைய துறையில் அதற்குச் சமமான பதவியொன்றை வகித்தல். **மற்றும்**<br>முதலாம் தரத்தின் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 06 ஆண்டுகள் அனுபவம் இருத்தல். |
| **04.உதவிக் கருத்திட்டப் பணிப்பாளர் (சமூகப் பாதுகாப்பு)**<br>**ஒரு வெற்றிடம்**<br>PS-4<br>சமூகப் பாதுகாப்புக் கொள்கைகளைத் தயாரித்தல், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் அவற்றை நடமுறைப்படுத்துவதற்கான கருத்திட்டச் செயற்பாடுகளுக்குரிய விடய அலுவல்களை இனங்காணல் மற்றும் அதன் பொறுப்புக்களை வகித்தல், அனைத்துக் காணிகள் மற்றும் சமூகப் பாதுகாப்புத் தொடர்பான அலுவல்களுக்குப் பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளருக்கு உதவுதல். | **(கீழேயுள்ளவற்றில் 1 அல்லது 2 ஆகியவற்றில் ஒரு தகைமை இருத்தல் வேண்டும்)**<br>01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட துறையில் பட்டமொன்று.<br>அல்லது<br>தொடர்புடைய துறையில் பட்டத்துக்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று,<br>அல்லது<br>தொடர்புடைய துறைக்குரிய தொழில்சார் நிறுவனம் ஒன்றிலிருந்து இணை உறுப்புரிமை (Associate membership) பெற்றிருத்தல்/ அவ்வாறான தொழில்சார் நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட அதற்குச் சமமான தொழில்தகைமை<br>மற்றும்<br>தகைமை பெற்ற பின்னர், தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது 09 ஆண்டுகள் அனுபவம் இருத்தல்.<br>02. நாடளாவிய அரசாங்க சேவை ஒன்றில் தரம் III/II அல்லது அதற்கு மேற்பட்ட தரமொன்றின் அலுவலராக இருத்தல்.<br>அல்லது<br>தொடர்புடைய துறையில் அதற்குச் சமமான பதவியொன்றை வகித்தல்<br>மற்றும்<br>தரம் III/II பதவியில் ஆகக் குறைந்தது 09 ஆண்டுகள் அனுபவம் இருத்தல். |

**சம்பள மட்டம்:**

| | | |
|---|---|---|
| 01 | PS-01 | ரூபா. 200,000.00 - ரூபா. 220,00.00 (மாதாந்த சம்பளம்) |
| 02 | PS-02 | ரூபா. 185,000.00 - ரூபா. 205,00.00 (மாதாந்த சம்பளம்) |
| 03 | PS-04 | ரூபா. 155,000.00 - ரூபா. 170,00.00 (மாதாந்த சம்பளம்) |

2019 மார்ச் மாதம் 5 ஆம் திகதிய நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 01/2019 இல் உள்ள விதிகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படுகின்ற அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் சகிதமானது.

**பொது நிபந்தனைகள்:**

01. வயது எல்லை: 64 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும் (64 வயதிற்கு மேற்பட்டவர்கள் கருத்தில் கொள்ளப்பட மாட்டார்கள்).
02. ஊழியர்சேமலாப நிதியத்திற்கு ஊழியரின் பங்களிப்பு 8% மும் மற்றும் தொழில் வழங்குநரின் பங்களிப்பு 12% மும் ஆகுமென்பதோடு, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு மாதாந்த சம்பளத்தில் 3%மும் ஆகும்.
03. பணியில் அமர்த்துதல் தொடர்பான விதிமுறைகள்:

    இந்த நியமனம் ஆரம்பத்தில் ஒரு (01) வருட காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுவதோடு, திருப்திகரமான செயலாற்றுகை மற்றும் கருத்திட்டத்தின் காலப்பகுதியின் அடிப்படையின் மீது சேவைக் காலத்தைக் கால நீட்டிப்புச்செய்வதற்கான சாத்தியப்பாடு காணப்படுகின்றது.

**விண்ணப்பித்தல்:**

அனைத்து விண்ணப்பதாரர்களும், உறவினரல்லாத இரண்டு பரிந்துரையாளர்களின் விபரங்கள் சகிதம் தயாரிக்கப்பட்ட சுயவிபரத் தகவல் படிவம் மற்றும் அனைத்துச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் தங்கள் விண்ணப்பப் படிவங்களை கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு 2025.08.07ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவம் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தற்போது அரச அல்லது பகுதியளவு அரச சேவைகளில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பப் படிவங்களைத் தமது நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலதிகத் தகவல்களுக்காக -

**தொலைபேசி : 011-2187211**
**தொலைநகல் : 011-2187205**
**மின்னஞ்சல் முகவரி : admin@transport.gov.lk**

**செயலாளர்,**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு.**
**(போக்குவரத்துப் பிரிவு)**
**7வது மாடி, செத்சிறிபாய,**
**II ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

**2025.07.15**